பிற்பகல் 12–45

6. தகவல் கோரல்

சென்னையில் போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள். (குறுக்கீடு) திரு. அன்பழகன், உட்காருங்கள். எனக்கு இன்று நேரமில்லை, உட்காருங்கள். இன்னொரு நாள் வாய்ப்பு இருக்கும்போது தருகிறேன். வாய்ப்பு இருக்கும்போது தருகிறேன். உட்காருங்கள், நேரமில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு, பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதெல்லாம் கொடுத்துவிட்டேன்.

***திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வருகிறேன். காலையிலிருந்து சென்னையில் எந்தப் பேருந்தும் ஓடவில்லை. காரணம் என்னவென்று கேட்டால், 1 ஆம் தேதி போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய சம்பளத்தைத் தரவில்லை, அதனால் அத்துணைபேரும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்லி, ஒரு பேருந்து, இரண்டு பேருந்துகள்கூட இல்லாமல், முழுமையாக 3 ஆயிரம் பேருந்துகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசாங்கத்திடம் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு பணம் இருக்கிறதா, இல்லையா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும், இது ஒன்று. இரண்டாவது, தொழிலாளர்கள் மத்தியில் ஒரு பெரிய குறை இருக்கிறது. இப்போது Shift என்று ஒரு புதிய முறையை போக்குவரத்துத் துறையிலே கொண்டு வந்திருக்கிறார்கள். அதன்படி காலை 8 மணியிலிருந்து மாலை 8 மணி வரை பேருந்தை ஓட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். விடியற்காலை 4 மணியிலிருந்து 8 மணிவரை பேருந்தை ஓட்டினால் வருவாய் அதிகமாக இல்லையென்று அந்தப் பேருந்துகளையெல்லாம் நிறுத்திவிட்டு, அந்த ஓட்டுநர்களை 8–லிருந்து 8 வரை என்று ஒரே shift என்ற முறையிலே கொண்டு வருகின்றபோது போக்குவரத்துத் தொழிலாளர்கள் மிகவும் சங்கடப்படுகிறார்கள். இது ஒன்று. கடந்த கால எங்களுடைய

2019 ஜூலை 1] [திரு. கே.என். நேரு]

ஆட்சியின்போது 12 மணி நேரம், 16 மணி நேரம் என்று duty *கொடுத்தால், மறு நாள்* off *தந்துவிடுவோம். ஆனால், இப்போது* off*–ம் தருவதில்லை. அதனால் தொழிலாளர்கள் மத்தியிலே மிகப் பெரிய மனச்சோர்வு ஏற்பட்டுத்தான் இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றிருக்கிறது. கிட்டத்தட்ட 8 ஆண்டுகாலத்திற்கு முன்புள்ள கணக்கை நான் சொல்கிறேன். 2006 ஆம் ஆண்டு, நாள் ஒன்றுக்கு சென்னையிலே போக்குவரத்துத் தொழிலாளர்களின் பயன் அளவீடு 80 இலட்சம் பேர். நாங்கள் ஆட்சியில் இருக்கும்போதே 1 கோடி பேர் சென்னையிலே பயணிக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய மக்கள் பயன்பாட்டிலுள்ள ஒரு துறை, போக்குவரத்துத் துறை. அந்தத் துறையின் சார்பாக இயக்கப்படும் பேருந்துகள் இன்றைக்கு முழுமையாக நிறுத்தப்பட்ட காரணத்தால்,* market*–லிருந்து வரவேண்டிய பொருள்கள் சமையலுக்கு வராது, விடியற்காலை எழுந்து வேலைக்குச் செல்பவர்கள் செல்ல இயலாது, தொலை தூரத்திலிருந்து நிறுவனங்களுக்கு வேலைக்குச் செல்கிறவர்கள் செல்ல இயலாது. அரசாங்கத்திற்கே இப்படி ஒரு நிலை வருகிறதே என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அன்றைக்கு நிதித் துறைச் செயலாளராக இருந்தவர் இன்றைக்கு தலைமைச் செயலாளராக உள்ளார். போக்குவரத்துத் துறையைக் காட்டிலும் மற்ற துறைகளான பொதுப் பணித் துறை, கல்வித் துறை, ஊராட்சித் துறை, மக்கள் நல்வாழ்வு துறை ஆகிய அத்தனை துறைகளுக்கும் 20 ஆயிரம் கோடி, 25 ஆயிரம் கோடி என்று வருமானம் வருகிறது. அரசாங்கத்திற்கு வருவாய் தருவதே 3 துறைகள்தான். ஒன்று, விற்பனை வரித் துறை, இரண்டாவது பத்திரப் பதிவுத் துறை, மூன்றாவது உள் (போக்குவரத்துத் துறை)–*Home (Transport) Department. *இந்தத் துறைகளிலிருந்து ஆண்டுக்குக் கிட்டத்தட்ட 6 ஆயிரம், 7 ஆயிரம் கோடி ரூபாய் பணம் அரசாங்கத்திற்கு வந்துகொண்டிருக்கிறது. பேருந்துகள் என்பது இலாப நோக்கோடு செயல்படுகின்ற துறை அல்ல. எங்களுடைய ஆட்சியில் முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தத் துறையைத் தொடங்கியதே நகரத்தில் இருக்கின்ற மக்களெல்லாம் என்னென்ன பயன்களைப் பெறுகிறார்களோ அவையெல்லாம் கிராம மக்களும் பெற வேண்டுமென்கிற பொது நோக்கத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் போக்குவரத்துத் துறை, இன்றைக்கு நகரத்திலுள்ளோருக்கே சம்பளம் தர முடியாமல் தொடர்ந்து இருக்கிறது. நகரத்தில் இருக்கின்ற ஒரு கோடி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசு என்ன நடவடிக்கை*

எடுத்திருக்கிறது, என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இலட்சம் மக்கள் பயணிக்கின்ற மிக முக்கியமான போக்குவரத்துத் துறை இன்று முடக்கப்பட்டிருக்கிறது. பகுதிப் பேருந்துகள்தான் இயக்கப்படுகின்ற சூழ்நிலை தமிழகத்திலே இருக்கிறது. ஏற்கெனவே நீங்கள் பேசி வைத்தபடி, agreement–ன்படி அவர்களுக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்கவில்லை என்ற மிக முக்கியமான பிரச்சினையை வைத்திருக்கிறார்கள். 62 விழுக்காடு தொகையை தற்போது வழங்கலாம் என்றும், மீதமுள்ள 38 விழுக்காடு தொகையை பிற்பாடு வழங்கலாம் என்றும் சொல்லியிருப்பது மிகவும் தவறு. போக்குவரத்துத் துறை என்பது ஒரு முக்கியமான, மக்கள் பயன்பாட்டில் இருக்கக்கூடிய, மிகவும் தேவையான துறையாகும். இது இலாபத்தில் இயங்கவில்லையென்றாலும், மக்கள் பயன்படுத்தக்கூடிய துறை என்ற வகையிலே அரசு இந்தப் பிரச்சினைக்கு முடிவு கண்டு, மக்கள் பயன்பாட்டிற்கு எந்தவிதமான கஷ்டமும் ஏற்படாதபடி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–50

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் சென்னையில் முழுவதுமாக பேருந்துகள் இயங்கவில்லை என்ற ஒரு தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார். அப்படியல்ல, கிட்டத்தட்ட 33 பணிமனைகளிலிருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்றன. 23,000 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். மாதம் 55 கோடி ரூபாய் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் மத்தியில் ஒரு தவறான தகவலைக் கூறியிருக்கிறார்கள். இன்று

மாலைக்குள் அந்த ஊதியம் முழுவதும் அவர்களுக்கு வழங்கப்படும் என்று, இன்று காலையிலேயே அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதுவரை இருக்கக்கூடிய 12 பணிமனைகளில் 100 சதவிகித பேருந்துகளும், 10 பணிமனைகளில் 90 சதவிகித பேருந்துகளும், 5 பணிமனைகளில் 50 சதவிகித பேருந்துகளும் இயங்குகின்றன. 6 பணிமனைகளில் உள்ள தொழிற்சங்கங்கள், பேருந்துகளை தொழிலாளர்கள் இயக்க விடாமல் தடுத்திருக்கிறார்கள். அவர்களிடத்திலும் எங்களுடைய போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மூலமாகப் பேசி, இன்று மாலைக்குள் அவர்களுக்கு முழுமையான சம்பளமான 55 கோடி ரூபாய் வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்து, பேருந்துகளை முழுமையாக இயக்குவதற்குண்டான நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, மேற்கொள்ளப்படும் என்பதை அவர்களிடத்தில் தெரிவித்திருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதி 9(1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை பேரவையின் 7–வது கூட்டத்தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

1. திரு. பி.எம். நரசிம்மன்
2. திரு. எஸ்.பி. சண்முகநாதன்
3. திரு. சு. ரவி
4. திரு. இரா. குமரகுரு
5. திரு. சு. குணசேகரன்
6. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

(இ) மானியக் கோரிக்கைகள், 2019–2020, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019–2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது: